செ.வெ.எண்:27/ஏப்ரல்/2019

நாள்:14.04.2019

திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற பொதுத் தேர்தல் வருகின்ற 18ம் தேதி நடைபெறவுள்ளதையொட்டி 6 சட்டமன்ற தொகுதியில் உள்ள வாக்குப் பெட்டிகளை சாரநாதன் பொறியியல் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்படும் அறைகளை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

------------

திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 139 ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதி 140 திருச்சிராப்பள்ளி மேற்கு, 141 திருச்சிராப்பள்ளி கிழக்கு, 142 திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி, 178 கந்தர்வகோட்டை(தனி) சட்டமன்ற தொகுதி, 180 புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கியது திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியாகும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சாரநாதன் பொறியியல் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்படும் அறையை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சாரநாதன் பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. வாக்குப்பெட்டிகள் பாதுகாப்பாக வைக்கப்படும் அறையில் வெப்கேமராக்கள் பொருத்தும் பணி வாக்கு எண்ணும் அறைகளில் இரும்புக்கம்புகளால் ஆன வலை அடிக்கும் பணி நடைபெற்று வருவதையும், மேலும் தரைதளத்தில் ஆஸ்பட்டாஸ்சீட்டாலான பந்தல் அமைக்கும் பணி விருவிருப்பாக நடைபெற்று வருகின்றது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வருகின்ற 18ம் தேதி இரவு முதல் வாக்கு எண்ணும் மையத்திற்கு பாதுகாப்பாக கொண்டுவரபடுவதால் அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மாட்ட நிர்வாகத்தின் மூலம் செய்யப்பட்டு வருவதை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று உறுதி செய்தார்.

இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.அன்பரசு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு)நாகராஜன்(சத்துணவு) ஆகியோர் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு:**

14/4/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**